# அரங்கேற்றம்



ழினி இளவரசி

7926
அரங்
SLIPR

# ARANGETRAM

**ELPHINSTONE THEATRE**
**20.06.98**





# BHARATHA NATIYA ARANGETRAM

of

*Thamizhini Veerasingam - Ilavarasi Veerasingam*

*Diciple of Natiya Kalaimany*

Miss. Gnanambikai Vickneswaran

*Staff, School of dance, Vivekananda Society, Colombo - 13*

*Under the Distinguished Patronage*

*of*

Chief Guest :

**R. Yogarajah M.P.**

Guests of Honours:

**Kambavarithi L. Jeyaraj**

**Mr. K. Raja Puvaneswaran**

*Secretary, Vivekananda Society, Colombo - 13.*

**Mr. Sinnadurai Thanabala**

*President, Saiva Munnetra Sankam, Colombo - 2.*

*on 20th of June 1998 Saturday 5.30 p.m.*

*at*

*The Elphinstone Theatre, Maradana.*

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்


# குருவும் மாணவிகளும்



கொழும்புத்
தமிழ்ச்சங்கம்

முதன்மை விருந்தினர்
பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி



பாவம், ராகம், தாளம் என்ற லயங்களை அபிநயங்களாக உலகிற்குப் படைத்த பெருமை பரத நாட்டியத்தின் சிறப்பாகும். இக்கலையானது, தமிழ் கலாச்சார விழுமியத்தின் பரிணாமமாக இன்று உயர்ந்து விளங்குகின்றது. இன்று அரங்கேற்றம் காணும் செல்விகள் தமிழினி, இளவரசி சகோதரிகள் இக்கலையை செல்வி ஞானாம்பிகை அவர்களிடம் முறையாகப் பயின்று இன்று அரங்கேற்றம் காண்பதையிட்டு என் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

வணிகத்தில் தலை சிறந்த தொழில் அதிபராகத் திகழ்ந்தாலும் தமிழ்க் கலைகள் மீதும் கலைஞர்கள் மீதும் ஈடுபாடு கொண்டு கலைவளர்க்கும் சிலரில் திரு.வேலணை வீரசிங்கம் அவர்களும் ஒருவர் என்பது நாடறிந்த ஒன்றாகும். தமது புதல்விகளைக் கலைத்துறையில் ஈடுபடச் செய்து கலை வளர்க்க முயலும் இத்தம்பதிகளின் தமிழ்ப் பணிக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளும் இவ்வேளை-

கற்ற கலையை உற்ற நோக்கோடு தாரணியில் நிலை சிறக்க வைக்க, தொடர் கலைப்பணி புரியத் திடசங்கற்பம் கொள்ள வேண்டுமெனக் கேட்டு நிறைகொள்கிறேன்.

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்
கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின்

## ஆசிச்செய்தி



நம் தமிழ்க் கலைகள் தெய்வீகமானவை.
சில மேலைத் தேசக் கலைகள் போல் உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்யாது, அவற்றை ஒடுக்கும் நுண்மை கொண்டவை.

நம் முத்தமிழும், தம்முள் ஒன்றியவரை கடவுளோடு ஒன்றுவிக்கும் சிறப்புடையவை.

இம்முத்தமிழ் நாட்டியம் அனைவரையும் ஈர்த்து நின்று முதன்மை பெறுகிறது. குழந்தைமுதல் முதியோர் வரை கற்றவர் கல்லாதவர் என அனைவரையும் ஈர்க்கவல்லது இது.

நாட்டியத்தின் அடிப்படையான "பாவனை" நம் ஆத்மீகப் பாதையிலும் உயர்நிலையிற் பேணப்படுதல் நாட்டியத்தின் உயர்வுக்கோர் சான்று.

தியானம் எனும் ஒன்றுதல் நிலை பாத்திரங்களோடு ஒன்றி, பாவங்களை வெளிப்படுத்தும் ஒரு நாட்டியக் கலைஞருக்கு இயல்பாதல் கண்கூடு.

கைவழி நயனமும் கண்வழி மனமும் செல்லும் நாட்டியத்தின் ஒருமித்த நிலை மாணவ சமுதாயத்தை நெறிப் படுத்தவல்லது. கலைகளுட் சிறந்ததான இக்கலையைப் பயில்வதாயின் நிறைந்த பொறுமையும், மிகுந்த கட்டுப்பாடும், சிறந்த குருபக்தியும் கைகூடுதல் அருமையிலும் அருமை.

இவற்றை, தம் இள வயதில் சாதித்துள்ளார்கள் செல்விகள் தமிழினி வீரசிங்கம், இளவரசி வீரசிங்கம் என அறியும் போது வியப்புண்டாகிறது. கலை உலகிற்கு இம் மாணவிகளை அர்ப்பணிக்கும் பெற்றோர் பெருமையோடு தலை நிமிர்த்தலாம்.

இந்த இளவயதில் மாணவிகளைத் தகுதிப்படுத்திய நடன ஆசிரியை, கலைமாமணி ஞானாம்பிகை விக்னேஸ்வரன் பாராட்டுக்குரியவர்.

ஐந்தொழிலையும் தன் நடன முத்திரையுட் பொதித்து உலகியக்கும் ஆடல் வல்லான் திருவடிகளைப் பணிந்து செல்விகள் தமிழினி வீரசிங்கம், இளவரசி வீரசிங்கம் அவர்களின் கலைப்பயணம் சாதனைகளைக் காண வாழ்த்துகிறேன்.

*"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"*

கொழும்பு - விவேகானந்த சபை
கௌரவ பொதுச் செயலாளர், சிவஞானச் செல்வர்
க. இராஜபுவனேஸ்வரன் அவர்களின்

## வாழ்த்துரை

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



எமது சபை கடந்த அரை நூற்றாண்டு காலமாக பரதக் கலையை கலாஷேத்திரா பாணியில் வளர்த்து வருகிறது. எமது நடன வகுப்பிலே இக்கலையைப் பயின்ற பல மாணவர்கள் தற்போது உலகில் பல இடங்களிலும் இத்தெய்வீகக் கலையைப் பரப்பி வருகிறார்கள். ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து இக்கலையைக் கற்றுச் சித்தி எய்திய மாணவர்களுக்கு நாம் நற்சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றோம்.

செல்விகள் தமிழினி வீரசிங்கம், செல்வி இளவரசி வீரசிங்கம் இருவரும் எமது நடன வகுப்பிலே தொடர்ச்சியாக இக்கலையைக் கற்று இறுதியாண்டுப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆவர். இவர்களுடைய அரங்கேற்றம் நடப்பதை அறிந்து நாம் மகிழ்ச்சியுறுகிறோம். இவர்களது பெற்றோர்கள் மிகவும் தமிழ்ப் பற்றும், கலைப்பற்றும் கொண்டவர்கள், அவர்களுடைய முயற்சியை நாம் பாராட்டுகின்றோம்.

இவ் இரு நர்த்தகிகளையும் உருவாக்கிய ஆசிரியை செல்வி ஞானாம்பிகை விக்னேஸ்வரன் அவர்களைப் போற்றாமல் இருக்க முடியுமா ?

இவ் அரங்கேற்ற விழா சிறப்புற அமைய வேண்டும். தமிழினியும் இளவரசியும் இக்கலையைத் தொடர்ந்து பரப்பவேண்டும் எனக் கலை அரசன் நடராசப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

# குருவின் ஆசியுரை

நாட்டியக் கலைமணி

செல்வி. ஞானாம்பிகை விக்னேஸ்வரன்



ஆயகலைகள் அறுபத்து நான்கினுள்ளும், தனிச்சுடராக விளங்குவது பரதக்கலையாகும். பாவம், இராகம், தாளம் சேர்ந்து பரிமளிக்கும் இப் பரதக்கலை ஆடலரசனான நடராஜப் பெருமானால் நமக்கு அளிக்கப்பட்டது. இத்தகைய மகிமை மிக்க கலையினை முறையாகப் பயின்று, இன்று அரங்கப் பிரவேசம் செய்யும் விவேகானந்த சபை மாணவிகளான செல்விகள் தமிழினி வீரசிங்கம் இளவரசி வீரசிங்கம் இருவரும் எனது சபை மாணவிகளாவார்.

செல்விகள் இருவரும் கலையார்வம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர்கள். இவர்களது பெற்றோர்களும் கலையில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள். சகோதரர் மிருதங்கக் கலைஞர். இவ்வளவு சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்ற கலாச்சாரப் பின்னணியில் வளர்ந்த தமிழினியும் இளவரசியும் நாட்டியக் கலையில் சிறப்புப் பெற்று விளங்குவதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இவர்கள் சிறுவயதில் இருந்தே விவேகானந்த சபையில் "பரதம்" பயில ஆரம்பித்தனர். இவர்களிடம் நல்ல தாள ஞானபாவம் இருப்பதோடு பயிற்சியில் சோர்வில்லாது ஆர்வம் காட்டியுள்ளார்கள். கலையைப் பயில்வது கடினம். அதைப்பேணிப் பாதுகாப்பது அதனிலும் கடினம். இவ்வரிய கலையினைப் பயின்று தமது திறமையினைப் பலருக்கும் எடுத்துக்காட்டிப் பாராட்டுப் பெறும் இவ்வேளையில் இச்செல்விகளுக்குக் கலை அறிவை நாட்டி மிளிர வைத்த எம்பிரான் தில்லை நடராஜப் பெருமான் தேர்ச்சியும் உயர்ச்சியும் குறையாது வழங்க வேண்டும் என வாழ்த்தி அம்பலக் கூத்தன் தாள் பணிந்து ஆசியுரை வழங்குகிறேன்.

*"வாழ்வு சிறிது, வளர்கலை பெரிது"*

## ஆலோசகர், லீலாம்பிகை செல்வராஜா

## அவர்களின்

# ஆசியுரை



கொழும்பு விவேகானந்த சபையில் பரதக்கலையை ஆறு வருட காலமாகப் பயின்று டிப்ளோமா சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட செல்விகள் தமிழினி வீரசிங்கம் இளவரசி வீரசிங்கம் ஆகிய இருவரின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று (20.6.98) நடைபெறவுள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

செல்விகள் இருவரின் இறுதியாண்டு டிப்ளோமா பயிற்சி நெறி செயன்முறைப் பரீட்சைக்குப் பிரதம பரீட்சகராக நான் இருந்த பொழுது இவர்களின் திறமையைக் காணக் கூடியதாக இருந்தது. இவர்களது திறன்களை விருத்தி செய்து செவ்வனே வழிநடத்திய ஆசிரியை செல்வி ஞானாம்பிகை விக்னேஸ்வரன் பாராட்டப்பட வேண்டியவர். இவரது அயராத உழைப்பும், ஆர்வமும் இன்றைய நடன அரங்கேற்றத்திற்கு அத்திவாரமாய் அமைந்துள்ளன எனின் மிகையாகாது.

செல்வி ஞானாம்பிகை விக்னேஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் பரத நாட்டியம் பயின்று "நாட்டியக்கலைமணி" என்னும் விருதினைப்பெற்று, இரண்டாம் பிரிவில் சித்தியடைந்தவர். இவர் தற்போது நீர்/தோப்பு அரசினர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நிரந்தர நடன ஆசிரியையாகக் கடமையாற்றுகிறார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளைத் தன்னகத்தே கொண்டவர். பரதக் கலையில் மிகுந்த ஈடுபாடும் பக்தியும் உடையவர்.

ஆர்வமும் ஆற்றலும் துடிப்புமுள்ள இவ்விளம் நடன ஆசிரியை மேன்மேலும் வளர்ச்சி பெற்று பரதக் கலைக்குத் தொண்டாற்ற எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

*லீலாம்பிகை செல்வராஜா*
*ஆலோசகர்*
*அழகியற் கல்வி நிறுவகம்*
*மீபே, பாதுக்க*

Ph. [illegible]

**S.R.M. ARTS AND SCIENCE COLLEGE**

[illegible]

[illegible]

# *Message from the Principal*

## *(S.R.M.Arts and Science College)*

Ms.Thamilini Veerasingam, is a bonafide student of our Institution. She is doing her Bachelors degree in Science B.Sc (Microbiology) in our Institution since July 1997. I am given to understand that, in addition to her studies, she is also keenly interested in the field of Arts and has learnt the Classical Dance of Tamil Nadu,Bharata Natyam and scheduled to have her dance arangetram on 20-06-1998 there by truly qualifying herself as a student of Arts and Science College. We are very impressed and proud of her achievements and wish her Arangetram every success.

Congratulations Thamilini, keep it up....

PRINCIPAL

PRINCIPAL
S.R.M. ARTS AND SCIENCE COLLEGE
CHENNAI - 600 [illegible]

---

**IICS**

**INFORMATICS INSTITUTE OF COMPUTER STUDIES**

**57, Ramakrishna Road, Colombo - 6, Sri Lanka. Tel.:580714, 585212, 583299 Fax: 589729 e-mail iics@iics.ac.lk.**

Miss. I. Veerasingam,
81/1, College Street,
Kotahena,
5 June 1998
Colombo 13.

Dear Ilavarasy,

We are proud that you have reached the stage of being a mature and professional dancer. It is indeed heartening to note that you are not only performing well in your studies but have found time to excel in the traditional form of oriental dancing.

On behalf of the staff and students at Informatics Institute of Computer Studies, our heartfelt congratulations on the occasion of your Bharatha Natya Arangetram.

Wish you success in all your future endeavours.

Prof. Abdul Hussain
Institute Director

**IN COLLABORATION WITH MANCHESTER METROPOLITAN UNIVERSITY, U.K.**

# மாமணிகளாக ஒளிர்க !

## கலாநிதி கா.பொ.இரத்தினம்



முத்தமிழில் ஒன்றான கூத்துக் கலையின் ஆதியாக நடனக்கலை விளங்குகின்றது. நடனக் கலை மக்களின் உணர்வுகளோடு தொடர்புடையது. இதனுடன் இசையும் சேர்ந்து ஆடல் பாடலாகத் தமிழ் நாட்டின் மரபுக் கலையால் பிற நாட்டவரும் வியப்புறப் பல்லாயிரம் ஆண்டுகள் பல்கிப் பெருகி வளர்ந்து வந்துள்ளது.

வேலணை வீரசிங்கம் அவர்களின் செல்வங்களில் மூத்தவர்கள் நால்வரும் ஆண்கள். அவர்களில் முதல்வன் குறளரசு இசைக்கருவிகளில் சிறந்து விளங்கும் மிருதங்கத்தினைப் பல ஆண்டுகள் பயின்று இசையளித்தார். அது போல, வேழவேந்தன் - ஈழகாந்தன் - இளங்கோவன் ஆகியோரும் மிருதங்கம், நடனம் ஆகியவற்றிற் பயிற்சி பெற்றனர்.

அவர்களைத் தொடர்ந்து இளையவர்கள் பெண்கள் தமிழினி - இளவரசி ஆகியவரும் நடனக் கலையில் பயிற்சி பெற்று அரங்கேற்றத்திற்கு வந்துள்ளனர். வேலணை வீரசிங்கம் அவர்களின் கலையார்வம் மழலைகள் யாவரிலும் கலை உணர்வுகளாக மிளிர்ந்துள்ளன. மன மகிழ்வுடன் வாழ்த்துகிறேன்.

அவர்களுடைய நடன அரங்கேற்ற விழா **20.06.1998** இல் நடைபெற உள்ளது. இவ் விழாச் சிறந்து பொலிக !

இளங் கலைஞர்கள் இருவரும் கலைமாமணிகளாக ஒளிர்க!


Senthamilk Kalaimany, Thamilch Chanror
DR.K.P.RATNAM
B.A.Hons (Lond) M.A., B.O.L.(Madras)
D.Cult.(W.U.)Litt.Dr.(Waac)
Ex-Member of Parliament, Sri Lanka
(President, World Thirukkural Society)

H-12/9, Kalashetra Colony,
Besant Nagar,
Madras-600-090
Tel: 4910824


26-5-98

# "அருள்மொழி அரசி" வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஜே.பி. அவர்களின்

# ஆசியுரை

*"படகமடுத்த வாளரவம் பார்த்துடரப் பற்றி*
*விடமெடுத்த வேகத்தான் மிக்குச்—சடலம்*
*முடங்க வலிக்கும் முயலகன்தன் மொய்ம்பை*
*அடங்க மிதித்த அடிபோற்றி*



வழிவழியே மொழிபேகும் அற்புதக் கலையான ஆடற்கலை சைவசமயத்தின் தனிச்சொத்து. ஆடற்கலையின் நாற்றங்கால்களாக விளங்கியவை நமது ஆலயங்கள். "திருத்யோபசாரம்" என்பது இறைவனுக்கு வழங்கும் அறுபத்துநான்கு உபசாரங்களில் ஒன்று. ஆண்டவனுக்கே உரித்தான இவ்வருங்கலையில் அர்ப்பணிப்பு உணர்வோடு தனது வாழ்நாளை அக்கலைக்கே ஈந்து வாழ்ந்த மங்கையர்கள், "மாணிக்கம்" "தலைக்கோல்" போன்ற உயர்பட்டங்களைத் தாங்கி வந்தமையைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

எண்ணெண் கலைகளில் தலைசிறந்த இந்நாட்டியக் கலையைத் தக்க ஆசிரியர்கள் மூலமாக ஐயந்திரிபறப் பயின்று அரங்கேறியவர்கள் செந்தமிழ்ச் செல்விகளான தமிழினி வீரசிங்கம், இளவரசி வீரசிங்கம் ஆகியோர். ஆறுவயதிலேயே புகழ்பிக்க நடன ஆசிரியையான திருமதி.மஞ்சுளா விஜயரத்தினம் அவர்களிடம் பரதம் பயின்று, சென்னை திருமதி வசந்தா கிருஷ்ணமாச்சாரி என்ற கலைஞரிடம் நடன நுணுக்கங்களை அறிந்து, கொழும்பு.விவேகானந்த சபை நடனப்பள்ளியிலே பணியாற்றும் கலைமாமணி செல்வி. ஞானாம்பிகை விக்கினேஸ்வரனிடம் மெருகேற்றிக் கொண்டனர்.


இன்று பட்டைதீட்டப்பெற்ற வைரங்களாக ஒளிரும் செல்வி தமிழினி BSc.Micro Biology யும், செல்வி இளவரசி BSc. Computer Science ம் பயிலும் மாணவிகள். இவர்கள் மட்டுமல்ல... இவர்களது உடன் தோன்றல்களான செல்வர்கள், குறளரசு, வேழவேந்தன், ஈழகாந்தன், இளங்கோவன் முதலியோரும் கலைத்துறையிலும், கல்வித் துறையிலும் சிறந்து ஒளிர்கின்றனர்.

அரிய பண்புகளைத் தன்னகத்தே கொண்ட இக்கலை வாரிசுகளை வாழ்த்துவதோடு, தமிழிலும், கலையிலும், ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட தலைமைவழி காட்டிகளான திரு.திருமதி வீரசிங்கம் அவர்களின் அயராத முயற்சியினையும் பாராட்டுவது எமது கடமையாகும்.

இக்கலைத் தோன்றல்கள் இன்றுபோல் என்றும் வாழ வளர இறையருளை இறைஞ்சுகின்றேன்.

# கலைவித்துவம் ஓங்குக

## பேராசிரியர் இராசரத்தினம் சிவச்சந்திரன்



தமிழர் பண்பாட்டில் பரதக்கலைக்கு மிக உன்னத இடம் உண்டு. நீண்டநெடுங்காலமாக-பாரம்பரியமாக இவ் உன்னதம் பேணப்பட்டு வருகின்றது. பரமசிவன் அனுக்கிரகத்தின் பயனாக, பரதமுனியால் பரதக்கலை இலக்கணங்கள் வகுக்கப்பட்டதாகவும் பரதம் பயின்றுவந்தமையாலேயே "பாரதம்" என்ற பழம்பெயர் இந்தியாவுக்கு வழங்கிற்றென்றும் ஒரு வரலாறு பேசுகின்றது. பாரதத்தில் பிறந்த இக் கலைவடிவம் தென்னாசியக் கலைவடிவமாக உயர்ச்சிபெற்று இன்று உலகக் கலைவடிவமாக வளர்ச்சிபெற்று வருவதைக் காண்கின்றோம்.

கலாஜோதி ஆனந்தக் குமாரசாமியின் சிவநடனம் (Dance of Siva) எனும் ஆங்கிலமொழியிலான ஆய்வுநூல் மேற்கு நாட்டவருக்குப் பரதக்கலையின் சிறப்பையும் அபிநய நுட்பங்களையும் அறிமுகப்படுத்தியதோடு இதனை ஒரு உன்னதமான உலகக் கலையாகவே மாற்றியுள்ளது. "புத்தம் புதுக் கலைகள்..... மெத்த வளருது மேற்கே அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை" என்ற பாரதியின் துன்பக் குரலுக்கு எதிர்வினையாக எமது பரதக் கலை மேற்குக்குச் சென்று புகழ்பரப்புகின்றது.

ஆடவல்லான், நடராஜர், அம்பலக் கூத்தன் என ஆண்டவனை விழிப்பதால் இந்துக் கலாசாரத்தில் தெய்வீகக் கலையாக உன்னத இடம்பெற்றுள்ள இப்பரதக் கலையைப் பேண முனைகின்றவர்களும் (பெற்றோர்) வழிகாட்டுபவர்களும் (குரு) பேணுகின்றவர்களும் (நடனமணிகள்) பாராட்டுக்குரியவர்கள் மதிப்புக்குரியவர்கள். இவர்களது கலைப்பணியால்தான் பரதக் கலை எமது பாரம்பரியத்தில் -பண்பாட்டுக் கூறில் உன்னத இடத்தைத் தொடர்ந்தும் வகித்துவருகின்றது.

தமிழ்மறைக்கும் சிலப்பதிகாரத்திற்கும் ஆண்டுதோறும் விழா எடுத்துவந்த வேலணைத் தமிழ்ப்பாரம்பரியத்தில்-பண்பாட்டு வளர்ச்சியில் வேலணை வீரசிங்கத்தின் பங்களிப்புக் காத்திரமானது. இதனைக் கடந்த நாற்பது ஆண்டுகாலமாக அவரது தமிழ்ப்பணிகளை அவதானித்து வந்தவன் என்றவகையில் உறுதியாகக் கூறமுடியும். வேலணை வீரசிங்கத்தினதும் திருமதி அன்னலட்சுமி வீரசிங்கத்தினதும் வாழ்வின் முதற்பணியாக தமிழ்ப்பணியும், சமூகப்பணியும் விளங்குவதை அனைவரும் அறிவர்.

அவர்கள் பெற்ற அருந்தவப் புதல்விகள் செல்விகள்.தமிழினி - இளவரசி ஆகியோர் வழங்கவுள்ள பரதநாட்டிய அரங்கேற்றம் அற்புதமாக அமைந்து அனைவரையும் ஆனந்தபரவசத்தில் ஆழ்த்தவேண்டுமென வாழ்த்துகின்றேன். செல்விகளது அயராத உழைப்பும், பக்தியும் அர்ப்பணிப்பும் அவர்களைக் கலை உலகில் உன்னதம் பெறவைக்கும். இவர்களுக்கு இவ் உயர்கலையைக் கற்பித்த குரு பாராட்டுக்குரியவர். அவர்களது வித்துவம் கலை உலகில் ஓங்குக.

பேராசிரியர் இராசரத்தினம் சிவசந்திரன்
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
(வருகைப் பேராசிரியர், கிழக்குப் பல்கலைக்கழகம்)
B, 26,2/1 Soysapura flats, Moratuva.

# செல்விகள் வாழ்க

## இலக்கியச்செம்மல், செ.குணரத்தினம்.
## முன்னாள் - அரசு அமைச்சுச் செயலாளர்



முத்தமிழாய்ப் பரிணமித்து உலகுஆண்டு
மூவேந்தர்அரவணைப்பில்தவழ்ந்துபின்னர்
எத்திசையும் புகழ்போக்கி இருந்த எங்கள்
இருந்தமிழே தமிழ் மணக்க அரசுஓச்சி
தித்திக்கும் செங்கரும்பாய் திகட்டாத்தேனாய்த்
திருவான செந்தமிழாய்த் திசைகள் போற்று
முத்தமிழே மூவாத அழகுநங்காய்
முறுவலிப்பில் உளம்மகிழ்ந்தேன்வாழ்கநீயே.

பண்ணார்ந்த தமிழென்பார் இயலாய்நிற்கும்
பனுவலென்பார் அழகுஒளிர்ந்த பண்டமேய
விண்ணார்ந்த ஆடல்தரும் அரம்பையர்கள்
வியனழகு எழில்விஞ்ச ஆடல்காணும்
கண்ணார்ந்த கவின்கலையாய் அபிநயித்துக்
கனிவான அழகாடல் கவினார்செல்வம்
தண்ணார்ந்த தவக்கலையின் அழகுஎன்னே
தமிழ்அணங்கே நீபயிலும் ஆடலாமே.

அன்றந்த காவிரிப்பூம் மணலின்பாங்கர்
அழகொழிரும் முழுநிலவில் அருவியோரம்
மன்றாக அமைத்திட்ட ஆடரங்கில்
மாதவியாள் பயின்றிட்ட ஆடற்செல்வம்
என்றென்றும் தமிழ்இதயம் இறும்பூதெய்த
ஏற்றமுறு கவினார்ந்த இசையமுது
மன்றமிது கண்டபெரும் திருவேளங்கள்
மாறாத பேரெழிலே வணக்கம்சொல்வேன்.

ஆலமர்ந்த செஞ்சடையான் நெற்றிக்கண்ணன்
அருள்நிறைந்த சன்மார்க்க நெறியேநின்று
பாலமர்ந்த தமிழ்சைவம் இருகண்ணாகப்
பயில்மாந்தர் பண்டிதர்கள் வாழும்சீலம்
கோலங்கொள் தென்றல்தவழ்ந்து இன்பமூட்டக்
கொள்ளாத பெருநிலவில் எம்முன்னோர்கள்
காலம்வென்று கவின்கலைகள் போற்றும்நல்லூர்
கவினார்ந்த வேலணையூர் காண்பார்செல்வம்.

பொதிகையிலே பிறந்திட்ட தென்றற்காற்று
புதுமைநிறை சந்தனப்பூம் பொழிலில்வைகி
பதிமதுரை பயில்தமிழின் பான்மைதுய்த்துப்
பண்பாட்டின் செவ்வியிலே நடைபயின்று
நதிகளிலே சதிராடி நடனம்கற்று
நற்றமிழர் செந்தமிழின் நலனைத்தேடி
பதியணைந்து வேலணைவாழ் பண்டிதர்கள்
பயில்தமிழைக் காதலித்து அப்பதியில்வாழும்.

அவ்வூரில் பிறந்திட்டு அருளோடன்பு
அறம்பயின்றோன் கொடைச்செல்வம் ஆர்ந்தசெம்மல்
செவ்வியோன் திருநிறைந்தோன் வேலணையூர்
சீலம்கொள் பண்பாளன் வீரசிங்கம்
கொவ்வையிதழ் சந்தனத்தின் குளிர்தகைமை
குளிர்நிலவு அருள்நிறைவு குலவுசெல்வம்
பவ்வியமாய்ப் படைத்திட்ட செல்விகள்தம்
பரதமதைப் பார்த்திடவே கண்கள்போதா.

அபிநயத்தில் ஆடலது அசைவில்கண்கள்
அறிதரும்நற் செய்திகளில் ஆடரங்கின்
கவிதையினில் கற்றவர்கள் தொழுதுஏற்றும்
கற்பனையின் பொற்பதனில் ஆடலோடு
செவிதரும் நற்சேதிசொல்லும் திறனில்திங்கள்
திருநுதலின் அசைவதனில் தெரிவையர்தம்
புவிஅனைத்தும் கொள்ளைகொள்ளும் பேரழகாய்ப்
போற்றுநடம் கண்டின்று குதூகலித்தோம்.

கலைமகளின் கடாட்சமொடு பிரமதேவன்
கற்பித்த அற்புதங்கள் கனிவாய்ப்பேணி
விலைமதிக்க முடியாத ஆற்றல்கொஞ்ச
விஞ்சஅழகு கொஞ்சுநயனம் விரல்பால்நிற்க
நிலைநின்று பதம்சலங்கை நிருத்தானம்
நிதானித்து தமிழினி யோடு இளவரசி
கலைபயிலும் அற்புதமாய்க் கவின்திருவாய்க்
காலங்கள் பலகண்டு நீடுவாழி.

தமையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்மக்கள்
தனையீன்ற தமிழர்தம் பெருமைக்குமாய்
எமையீங்கு ஆடரங்கில் மகிழ்வேதந்த
ஏந்திழையார் நல்நடனம் இனிதுகண்டோம்
உமைபங்கன் உலகுஎலாம் படைத்துக்காத்து
ஓங்குநடம் அதுபுரியும் ஆடற்செல்வன்
அமைவுறவே அணியனைத்தும்அழகும்பெற்று
அரங்குபயில் நங்கையினர் அருளால்வாழி.

# வாழ்த்து



இனிய குணமும்
இயல்பான சொல்லழகும்
அன்பும் அழகும்
அணிசெய்யும் ஆரணங்கார்
தமிழினியும் தங்கை
இளவரசிப் பொன்மலரும்
பரதக் கலைபயின்ற
பண்பான ஆடலினை
உற்றார் உவப்ப
ஊரவர்கள் வாழ்த்தொலிப்ப
கற்றவர்கள் கண்டு
களிபே ருவகைகொள்ள
அணிசெய் அரங்கேறி
ஆட வருகின்றார்
கலை உலகம் இன்று
களிப்பெய்தி வாழ்த்திசைக்கும்
என் வாழ்த்தும் அதனோடு
இணைக!

அன்புடன்
வரதர்

# பரதமும் பாராட்டும்

தில்லைச்சிவன் - வேலணை -



கவலையைத்தீர்ப்பதும் நாட்டியக்கலை! இந்தியாவில் கதகளி, குச்சுப்பிடி, மணிப்புரி நடனங்கள் ஒவ்வோர் மாநிலங்கட்கும் ஒவ்வொன்றும் சிறப்புரிமை உடையனவாக இருத்தல் போல, பரத நாட்டியம் தமிழகத்துக்கே சிறப்பானது என்பர்.

தாண்டவம், கூத்து, குரவை, குறம், கரகம், காவடி, கோலாட்டம், கும்மி போல ஜனரஞ்சகமான நடனங்களை விடப் பரதம் சாஸ்திரீய வயப்பட்ட ராஜகலை.

திரண்ட அங்கங்களும் வாளிப்பான உடலமைப்பும் கொண்ட கன்னியர்களால் சாஸ்திரீய முறைப்படி பல்லாண்டுகள் பயிலப் பெற்று வேந்தர் அவையில் பல பிரபுக்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்வது என்றுமுள வழக்கம். இவ்வழக்கம் பற்றியே மாதவியின் நடன அரங்கேற்றத்தையும் அதனோடு சேர்ந்த நிகழ்வுகளையும் சிலம்பு கூறும் செய்தியால் அறியலாம். வேந்தவை, பொதுஅவை என இரண்டிலும் பரத நாட்டியம் வேந்தவை தொடர்பாகவே எண்ணப்பட்டு வந்துள்ளது.

கூத்தாடித் துண்டு விரிப்பதும் வீட்டாளுக்கு அஞ்சி நடப்பதும், நாட்டார்க்குள் பிச்சை எடுப்பதும் மாட்டாதான் செய்யும் செயல் என நம் கலைகளும் பெண்களும் ஆரியமாயையுட்பட்ட காலத்தால் சிதைவுற்ற பின் இன்று பரதம் மேல்மட்டக் கலை ஆர்வலர்களின் மன உந்துதல்களினால் ஆங்காங்கே நிகழ்வனவன்றிப் பொதுமக்களின் கலையாக உருப்பெறவில்லை. இதற்கான கால விரயமும் அரங்கச் செலவுகளும் கைக்கு அடங்காமையே காரணம் என நினைக்கின்றேன். பரத நாட்டியத்தைப் பொறுத்து கலை, கலைக்காகவே என்ற நிலைதான் உள்ளது.

இந்த நிலையில் வேலணை வீரசிங்கம் தம்பதியினர் தம் இரு புதல்விகட்கும் பரத நாட்டியப் பட்டயப்படிப்பை முற்றுவித்து அரங்கேற்றி ஆனந்திக்கும் நிலை கண்டு பெருமகிழ்வடைகிறேன்.

அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், கீர்த்தனம், தில்லானா முதலிய சாஸ்திரீய சங்கதிகளில் செல்விகள் தமிழினி வீரசிங்கம் இளவரசி வீரசிங்கம் இவர்களின் கலை ஆற்றலும் ஆர்வமும் சிறந்துயர வாழ்த்துகிறேன்.

இவர்களின் மூத்த சகோதரன் செல்வன் குறளரசு அவர்களின் மிருதங்க அரங்கேற்றத்தைக் கண்டு கேட்டு அனுபவித்த நான், இன்று சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றத்தையும் பார்க்கக் கிடைத்தமை நினைத்து சகோதரிகள் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து கலைத்தொண்டு புரிய வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

கலாசூரி ஆர். சிவகுருநாதன், எம். ஏ.
சட்டத்தரணி, சமாதான நீதிபதி, முன்னாள் தினகரன்
ஆசிரியர் அவர்களின்

# வாழ்த்துரை



அடிக்காண்பித்தும் ஆட்டத்தைப் பார்த்தும் உணரவேண்டியது பரதக்கலை. இக்கலை சாஸ்திர விபய காரங்கள் நிரம்பியது. அதன் சிறப்பான அம்சங்களைச் சொல்லில் வர்ணிக்கவியலாது. பரத நாட்டியத்திற்குள் சில மரபு வேற்றுமைகள் உண்டு. ஆடல் ஆசிரியர்களான நட்டுவாங்கம்செய்பவர்கள் ராக, தாள, சாகித்தியங்களுக்கு ஏற்ப ஆட்டக் கோவைகளையும் அவற்றிற்கான அசைவுகளையும் வேறுபட்ட வகைகளில் கையாள்வதுண்டு. இதுதான் மரபு வேற்றுமை என்று வண்ணை சி.எஸ்.எஸ். மணிஐயர் (பின்நாட்களில்நல்லை ஆதீன தம்பிரான் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள்) கூறுவதுண்டு. இவரிடம்யாழ்இந்துக்கல்லூரியில் சிறுபராயத்தவனாக இருந்தபோது பண்ணிசை, நடனம் பயின்ற பாக்கியம் அடியேனுக்குண்டு. மரபுகளுக்கிடையேவேற்றுமை அதிகம் இருப்பதில்லை அடிப்படை எம்மரபுக்கும் பொருந்தும். நடனக்கலையில் ஆட்டம் போல அபிநயமும் முக்கியத்துவம் மிக்கது. ஆட்டத்தைப் புரிவதுதான் கஷ்டமானது.

இத்துணை சிறப்பு வாய்ந்த, தெய்வீகக் கலையான பரதத்தை நன்கு தக்க ஆசிரியர்களிடம் பயின்று பின் விவேகானந்த நடனக் கல்லூரி ஆசிரியை செல்வி ஞானாம்பிகை விக்னேஸ்வரன் அவர்களிடம் செல்விகள் தமிழினியும் இளவரசியும் பரதத்தைச் செவ்வனே பயின்றவர்களாதலின் உரிய காலத்தில் அரங்கேற்றுகிறார்கள். இவர்களுக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இவ்விளங்கலைஞர்களின் தந்தையார் வேலணையூர் வீரசிங்கம் தமிழ் ஆர்வம் மிக்கவர். பகுத்தறிவுப் பண்ணையில் வளர்ந்தவர். நீண்டகாலமாக முற்போக்கான தமிழ் இலக்கிய, கலை நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு உழைத்த பெருமகன். திருமதி. வீரசிங்கமும் ஒரு கலாரசிகை. சிறந்த நடன ஆசிரியையைத் தேடிப்பிடித்துத் தம் குழந்தைகளுக்குப் பரதம் பயிற்றுவித்திருக்கின்றார்கள் இவர்கள்.

இவர்களது இலட்சியம் நிறைவேறிவிட்டது என்பதனை இவ்வரங்கேற்ற நிகழ்ச்சி உணர்த்துகின்றது. "கைவழி நயனம் செல்ல, கண்வழி மனமும் செல்ல ஆடுவதே" இக்கலையினை நன்கு பயின்றவர்கள் ஆடும்போது நாம் காண்கின்ற சிறப்பம்சம் ஆகும். இவ்விருவரும் பரதநாட்டிய சாஸ்திரத்தின் அடிப்படைத் தர்மங்களை நன்கு கற்றிருக்கின்றார்கள். எனவே, இவர்களது ஆடல் நிகழ்ச்சி ரம்மியம் மிக்கதாக அமையும் என்பது எனது நம்பிக்கை. இவ்விளங்கலைஞர்கள் தொடர்ந்து இத்துறையில் சிறப்புடன் விளங்கிடத் தில்லைஅம்பலத்தில் நர்த்தனம் புரியும் எம் ஐயன் அருள்பாலித்திட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

தினக்குரல் நாளிதழ் நிர்வாக அதிபர்,
யுனைடெட் மெர்ச்சன்ற் லிமிடெட் குழுக்களின் தலைவர்,
வட கொழும்பு இந்து பரிபாலன சபைத்தலைவர்

### எஸ். பி. சாமி அவர்களின்

# வாழ்த்துரை



நண்பர் வீரசிங்கம் அவர்களின் புதல்விகள் தமிழினி - இளவரசி ஆகிய இருவரின் நடன அரங்கேற்றம் நடைபெறவுள்ளது. அது, மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாகும்.

நாம் இருவரும் வேலணையைத் தாயகமாகக் கொண்டவர்கள்; அயலவர்கள்; நீண்டகால நண்பர்கள்.

கல்வியில் மட்டுமல்ல, கலைத்துறையிலும் நமதூர் மேம்பாடுடையது. அதன் வழியில், இயல்பாகவே நண்பர் வீரசிங்கம் அவர்கள் கலைத்துறையில் இளமையிலிருந்தே ஈடுபாடுடையவர். அத்தோடு ஒரு பகுத்தறிவுவாதியுமாவார். எனினும், சமயவாதிகளோடு நெருங்கிப் பழகியும் தொடர்புகளுடையவராகவும் இருந்து மக்கள் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பவராகவும் உள்ளார்.

வணிகத்துறையில் உள்ள கவனமும் அக்கறையும் அவர் தம் குடும்பத்தின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் வைத்திருந்தார். கல்வித்துறையில் பிள்ளைகளை நன்கு வளர்த்துள்ளார். ஆண்பிள்ளைகள் பொறியியற்றுறையில் பட்டதாரி ஆகியும் ஆகவும் உள்ளனர். பெண்களில் ஒருவர் நுண்ணுயிர்த் துறையிலும், மற்றவர் கணனித்துறையிலும் பட்டதாரிப் படிப்பை மேற்கொண்டுள்ளனர்.

தான் கலைத்துறையில் ஈடுபட்டது மட்டுமல்ல, தனது பிள்ளைச் செல்வங்கள் எல்லோரையும் இதில் ஈடுபட வைத்துள்ளார். மிக இளம் பிராயத்திலிருந்தே இவரது மூத்த மகன் குறளரசுவுக்கு மிருதங்கம் பழக வாய்ப்பளித்து, பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தில் அரங்கேற்றமும் செய்தார்.

நடனக் கலையினை வழமையாகப் பெண்கள்தான் பயில்வார்கள். வீரசிங்கம் அவர்கள் அவரது ஆண்பிள்ளைகளாகிய வேழவேந்தன், ஈழகாந்தன், இளங்கோவன் ஆகியோருக்கு நடனப் பயிற்சி பெற வைத்தார்.

இப்பொழுது அவரது இளைய மக்கட் செல்வங்கள்-புத்திரிகள் தமிழினி-இளவரசி ஆகியவரின் நடன அரங்கேற்றம் 20.6.1998 இல் நடைபெற உள்ளது. இதில், எனக்கு இரட்டை மகிழ்வு. ஒன்று - எனது நண்பரின் பிள்ளைகள்; மற்றையது என் மடியில் விளையாடிய குழந்தைகள்.

எனது மகிழ்வோடு, எமது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இசையும் கலையும்

பிரபல நாவலாசிரியர்
செ. யோகநாதன்

சென்னை மாநிலக் கல்லூரி இயற்பியல் துறைப் பேராசிரியர் திருவீரபாண்டியன், கணனி வழியாக கர்நாடக சங்கீதத்தை மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பதாகவும், அவர் தமிழிசைப் பிரியர் என்றும் நானும் அவரும் சந்திக்க வேண்டுமென்றும் என் நண்பர் ஒருவர் கூறியிருந்தார். அதன்படியே இருவரும் சந்தித்தோம். வீரபாண்டியன்,தனது கணனியில், செயல்முறையில் கர்நாடக சங்கீத அடிப்படைகளையும் ஸ்வர வரிசை அமைப்பையும் இயக்கிக் காண்பித்தார். இரண்டு மாத காலங்களிலேயே மனதிற்கு வசப்படக் கூடிய ஆரோகண, அவரோகணங்களை, இருபது நிமிஷங்களில் அறியும் விதமாகக் கணனியைப் பேசவைத்தார். அந்த நிமிஷங்கள் எனக்கு ஆச்சரியத்தை விளைத்தன. கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்தால், தம்புராவில் இழையும் நாதத்தோடு எதிரே ஒருவர் ராகங்களைப் பாடுவதைக் கேட்கும் மனநிலையைக் கணனி தருகின்றது. எல்லாம் முடிந்த போதும் என் பிரமிப்புத் தீரவில்லை.

"இந்தக் கணனி மூலம் எவராலும் கர்நாடக இசையை ஒரு மாதத்தில் கற்கமுடியும்" என்றார் அவர். அப்போது என் மனதில் பளிரென்று மின்னல் கீறிற்று. என்னால் அவர் சொன்னதை ஒப்புக் கொள்ளமுடியவில்ல. இசையோ, கலையோ யாந்திரீக ரீதியாகக் கற்றுக் கொள்ளத் தக்கவையல்ல என்பது என் அழுத்தமான அபிப்பிராயம். கர்நாடக இசை பற்றிய அறிவை, கணனி வழிபாக அறிந்து கொள்ள முடியும். ஆனால் வித்வத்துடன் குரல் இனிமையும் சேரப் பாடவோ, குறைந்த பட்சம் ராக ஆலாபனம் செய்யவோ கூட முடியாததென்ற என் கருத்தை அவரிடம் கூறினேன். அவர் ஒன்றும் பேசவில்லை.

கல்குயின் கருத்தொன்றை அவரிடம் கூறினேன். "கர்நாடக சங்கீத வித்தை அருமையான வித்தை. அந்த வித்தையில் தேர்ச்சியடைதல் எளிய காரியமுமன்று. அதற்கு இயற்கையோடு பிறந்த இசை உணர்ச்சி வேண்டும். இடைவிடாதஉழைப்பும் பயிற்சியும் வேண்டும். இப்படி அரிதில் பெற்ற வித்தை சோபிப்பபதற்கு இனிய சாரீரம் வேண்டும்." அது

இசைக்கலைக்கு மட்டும் உரிய இலக்கணமல்ல. ஆடற்கலைக்கும் அப்படியே பொருந்தத்தக்கது.

தமிழ்க்கலை வரலாறு, இசையோடும் ஆடற்கலையோடும் பின்னிப் பிணைந்து வளர்ந்தது. உன்னதமான இசைக்கருவிகள் நமக்குச் சொந்தமானவை. சுவாமி விபுலானந்தர் 'யாழ் நூலில்' இதைப் பெருமையோடு வெளிப்படுத்தினார். உலக இசை, ஆடற்கலை மரபில் நமது பங்கு பல சிகரங்களைத் தொட்டிருக்கின்றது. இது வரலாறு.

பரதநாட்டியமும், இசையும் பல தடைகளைத் தாண்டியே இன்றுள்ள மேன்மையை எய்தியிருக்கின்றன. சோழ மன்னர் காலத்தில் பரத நாட்டியக்கலை அரசகுல ஆதரவோடு அரண்மனைகளிலும் ஆலயங்களிலும் வளர்ச்சி பெற்றிருந்தது. பின்னர் இது 'சதிர்' எனத் தேய்வு பெற்று இழி நிலையை அடைந்தது. இதை மாற்றியமைத்தவர் நாட்டிய தாரகை பாலசரஸ்வதி தேவி. பரதநாட்டியக்கலையில் அடங்கியிருக்கும் சாஸ்திரத்தையும் கட்டுப் பாட்டையும் இவர் ஆதார பூர்வமாக எடுத்துக் கூறினார். பரத நாட்டியத்தின் கம்பீரத்தையும் வசீகரத்தையும் நளினத்தையும் சோபி தத்தையும் தனது ஆடல் திறனால் உலகறிய வைத்தவர் பாலசரஸ்வதி. உலகம் போற்றும் இயக்குநர் சத்யஜித்ரே இதனால் தான் 'பாலா-நடனமணி' என்ற பெயரில் விவரணத் திரைப்படம் ஒன்றையும் தயாரித்தார்.

ருக்மணி அருண்டேல் பரத நாட்டியத்துக்குரிய சமூக கௌரவத்தை தன் ஆடல் திறனால் உருவாக்கினார். அவர் உருவாக்கிய 'கலாஷேத்ரா" பின்னர் பரதநாட்டியக்கலையை உலகெங்கும் எடுத்துச் செல்லும் சிறப்புமிக்க கலையகமாகிற்று. இதே வழியை மேலும் விசாலமாக்கி வழுவூர் ராமையாபிள்ளை போன்றோர் ஆடற்கலை வளர்ச்சிக்கு உறுதுணையானார்கள்.

இழிவுற்று ஒதுக்கப்பட்டிருந்த பரதக்கலையை இவர்களோடு சேர்ந்து தைரியமாகத் தமது விமர்சன எழுத்தால் முன்னெடுத்த பெருமை 'கல்கி'க்கு உரியது. 'ஆடல் பாடல்' என்ற தலைப்பில் 'கல்கி' இதழில் அவர் எழுதிய விமர்சனங்கள் தமிழ் மக்களிடையே இத்துறைகளிடத்து ஆர்வத்தை ஏற்படுத்தின. மேல்தட்டு வர்க்கத்தினர் தமது பணபலம் ஒன்றை வைத்து மேடையிலே இக்கலைகளை வளர்க்க முயன்றதை ஆணித்தரமாகச் சாடிய 'கல்வி' பரதக்கலையையும், இசைக்கலையையும் செம்மையாக வளர்ப்பதில் முக்கிய பங்காற்றினார். இப்போது இவ்வழியிலே விமர்சனம் எழுதி வருபவர் 'சுப்புடு'.

மேடையில் வளர்ந்த இக்கலைகள் ஆரம்பத்தில் சமஸ்கிருத, தெலுங்கு மொழிகளையே வெளிப்பாட்டுக்குரலாய்க் கொண்டிருந்தன. இந்த மொழிக் கீர்த்தனைகளாலேயே இக்கலைகளைக் காண்பிக்க முடியும் என்ற அபிப்பிராயம் இறுக்கமாக நிலவியிருந்தது. இதை **1930**களில் தோன்றிய 'தமிழிசை இயக்கம்' கடுமையாக விமர்சித்தது. அத்தோடு நில்லாமல் ஆடல், பாடல் கலைகளிலே தமிழிசையைப் பின்னிப் பிணைய வைத்தது. இன்றைக்கு பாபநாசம் சிவன், மகாகவி பாரதி, பாரதிதாசன் சுத்தானந்த பாரதியார் போன்றோரின் பாடல்கள் தமிழ் ஆடல், பாடல் கலைகளை உயிர்ப்போடு வளரச் செய்தன. வளரச் செய்கின்றன.

தமிழிசை, பரதநாட்டியக் கலைகளின் உள்ளடக்கம் முன்னரைவிட இப்போது சீரும், செம்மையும் பொலிய முன்னேறி வருவதைக் கண்ணாரக்காண முடிகின்றது. இன்றைய இளங் கலைஞர்களின் ஆடலும் பாடலும் பழைய கலைஞர்களை வியக்க வைக்கின்றன. எனினும் திரைப்படத்துறை இக்கலைகளை மலினப்படுத்த முயற்சிகள் எடுக்கின்றன. இதற்கு எதிரான போராட்டம் ஒன்று அவசியப்படுகிறது. எலும்புக்கூடுகளை பரத நாட்டியம் ஆடச் செய்வதும், 'ராப்' இசையினால் தமிழ் இசை மரபைச் சிதைக்கும் முயற்சிகளும் வக்கிரமானவை மட்டுமல்ல, ஆபாசமானவையுங்கூட. ஆழவேரூன்றிய தமிழ் ஆடல், பாடற்கலைகளை இவை அசைக்க முடியாதெனினும், இன்றைய இளந்தலைமுறை நமது கலைமரபை உதாசீனம் செய்யவும் இவை வழி வகுக்கலாம். இன்றைய அர்ப்பணிப்புள்ள இளங்கலைஞர்கள் இந்தப் போக்குகளை முற்றாக நிராகரிக்கவேண்டும். தமிழ் ஆடல், பாடற்கலை வளர்ச்சிக்கு ஆர்வமாகப் பங்களிப்புச் செய்யவேண்டும்.

# கலையும்-நண்பரும்

அ. பொ.செல்லையா
-மீசாலை-

ஆடற்கலை அரங்கக்கலை மட்டுமல்ல- அருங்கலையுமாகும். நுண்கலைகள் ஐந்தினுள் நடனக்கலை ஆதியானதும் அந்தமில்லாததுமாகும். சிற்பம், ஓவியம், இலக்கியம் ஆகியவை சடத்துவமானவை. ஆனால், இசையும் நடனமும் உயிருள்ளவை. அதிலும் நடனம், ஐம்பொறிகளின் புலன்களைப் புலப்படுத்துவது. இதற்கு, நுண்ணறிவும் நுண்ணாற்றலும் தேவை.

உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடே உடலுறுப்புக்களின் அசைவாகும். உள்ளக் குறிப்புக்களையும், அவற்றை வெளிப்படுத்துவதற்குரிய கண், கை முதலிய உறுப்புக்களின் இயக்கங்களையும் உடையது நடனக்கலை. கலைகளிலெல்லாம் மிகச் சிறந்தது ஆடற்கலை!

ஆதி மனிதர் இருவர் தற்செயல் சந்தித்தபோது 'யார் நீ என்னைப்போல இருக்கிறாய்! எங்கிருந்து வருகிறாய்? என இருவரும் தம்மை அறிய மாறி மாறிக் காட்டிய அசைவு, எழுந்த ஓசை ஆகியனவைதான் மனிதனின் முதல் ஆடலும்-பாடலுமாகும். இதன் வளர்ச்சியே கூத்து என்றானது. நடனமும், இசையும், நடிப்பும் கூத்தின் பகுதிகளாகும்.



தொல்லுலக மனிதர்கள் தமது செயற்பாடுகளை, குறிப்பாக வேட்டையாடு தலை மலையடிவாரத்தின் பரந்த வெளியில் அமைக்கப்பட்ட பெரிய நீள- அகலமான அரங்கில் நடித்து, தாங்களும் மகிழ்ந்து, மற்றைய வர்களையும் மகிழ வைத்தனர்.

காலப் பரிணாமம் பல வடிவங்களில் நடனக்கலையை வளர்ச்சி பெறச் செய்தது. வளர்ச்சி நேரான ஏணியின் வளர்ச்சியாக இல்லாது, பாம்பும்-ஏணியுமாகிய தாய விளையாட்டுப்போல அமைந்தது மட்டுமல்லாமல் பலத்த எதிர்ப்புகளையும் சமாளித்து, எதிர் நீச்சலடிக்க வேண்டியுமிருந்தது. இன்றும் பழமை விரும்பிகள் - சமயவாதிகள் நடனக்கலையை ரசனையாகக் கொள்வதில்லை. கடந்த காலங்களில் சமயங்கள் எல்லாம் கூத்துக் கலையை பழித்தன- ஒடுக்கின, இதனால் நடனக்கலையை நசித்தன. நடனக்கலைஞர்களை இழிமொழிகளால் இழித்தனர், அசிங்கப்படுத்தினர்.

'கூத்தாடுவதும் குண்டி நெழிப்பதுவும் ஆத்தாதவன் செயல்' என்றனர். கோயிலில் நடனமாடியவர்களைச் 'சின்னமேளம்' என்றும் ஆட்டத்தைச் 'சதிராட்டம்' என்றும் இழிந்த கருத்தில் கூறினர். சிலப்பதிகார காலத்திலே நடனமாடுபவர்கள் தாசிகளாகக் கணிக்கப்பட்டு, அவர்களைக் கணிகையர் குலமாகவும், தேவதாசிகள் எனத் தாசியர் கூட்டமாகவும் கொள்ளப்பட்டனர்.

கூத்து- நடனம் போன்றவற்றிற்கு மக்கள் மத்தியில் மதிப்பு இருந்தது, நிகழ்ச்சிகளுக்குக் கூடினர், பார்த்தனர், மகிழ்ந்தனர்.

பிரபுக்களும் - சமயவாதிகளும் பொறாமை கொண்டனர், ஆத்திரமடைந்தனர். அரசனுக்கு அண்டினர். வத்தி வைத்தனர். கருத்தேற்றங்கள் காவலனைக் கடிதாக்கின. வந்தது சட்டம் கூத்தாடக் கூடாது என்று! கூடியவர்களைக் கலைத்தனர், மக்கள் மலைத்தனர் செயற்பாடுகளைக் கண்டு! கூத்தில் - ஆடலில் ஆர்வமிக்கவர்கள் ஆற்றல் உள்ளவர்கள் ஊரின் எல்லைப் புறத்தில் தொல்லையின்றி நடித்தனர்- ஆடினர். மக்கள் கூடினர். பார்த்தனர். மகிழ்ந்தனர். மிகவும் இரகசியமாக, இப்படியாகக் கோயில் முகாமைத்துவத்தின் கோலத்திலிருந்து, அரசனின் தண்டனைகளிலிருந்து தப்பி வளர்க்கப்பட்டவை தான் இன்றைய நாடகமும் நடனமும்!

தனித்துவமும் இயல்பும் இயற்கையுமானதாக அமைந்த தமிழர் கலைகள் ஆரியர் வருகையின் பின் மூல-அசல் நிலையிலிருந்து வேறுபட்டன. மானமொன்றே தம் வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த நம் மறத் தமிழர்கள் பூனைகளல்லர்-புலிநிகர் தமிழ் மாந்தராக வாழ்ந்துள்ளனர். எனினும் அரசியல் ஆசைகாட்டி, காட்டிக் கொடுக்கும் கயவர்கள் வீரவாகு, விபீடணன், பிரகலாதன் போன்றவர்களால் மானங் காத்த மாவீரர்களாகிய பேரரசர்கள் சரித்து வீழ்த்தப்பட்டார்கள்; வீண்பழி சுமத்தப்பட்டார்கள். கலப்படங்கள் நம்பின; மகிழ்ந்தாடின! தமிழ் தன்னீர்மை குன்றியது. இரவற் பண்டமாயிற்று.

அதுபோன்றதொன்றுதான் நடனக்கலையும்! மக்கள் கலையாக மிளிர்ந்த நடனக்கலை அருட்கலையாக மாறியது! தனித்தமிழ் ஆசான்களைக் கொண்ட கலைஆரியர்களை அல்லது ஆரியதாசர்களை ஆசிரியராகக் கொண்ட கலையாக மாறியது! இத்தகையதொரு அமைப்பு மாற்றந்தான் பரதமுனிவர் தந்த பரதக்கலை!

"யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் புறநானூற்றுச்

செய்யுளால் உலகத்தில் ஒருவனானவன்-மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மொழிக்குத் தொல்காப்பியம் எனும் ஒல்காப்பெரும் இலக்கணம் வகுத்தவன் - இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் அகிலம் கண்டு வியக்கும் குறள் தந்தவன்-கட்டடக்கலையில் உலகம் வியக்க நின்றவன்- எந்தவொரு நுண்கலையிலும் ஈடும்எடுப்பும் இல்லாதவன்- எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கொண்டு கணித மேதையாகக் திகழ்ந்தவன் -கேவலம், இவனுக்கு ஆரம்ப- அடிப்படைக் கூத்து, அதன் உடலும் உயிருமாகிய பாடலும் ஆடலும் இல்லாது இருந்திருக்குமா?

அதனால், பிறர் கலை கூடாது என்பதல்ல. பிறர்கலை தமிழ்க்கலையை மறைப்பதாக - சிதைப்பதாக விழுங்குவதாக இருக்கக் கூடாது. இரவு நடனம், 'கிளப் டான்ஸ்'- காபரே 'போல்றூம் டான்ஸ்' ஆகியன வேண்டாமென்றா ஒதுக்கப்பட்டுள்ளன?. தேவைக்கேற்ப அவை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இசை-நடனத்துறையில் பாவிக்கப்படும் வாத்தியங்கள் பல எம்முடையவை அல்ல என்று தள்ளியா விட்டோம்? ஐம்பது ஆண்டுகளுக்குமுன் நடனக்கலையின் முக்கிய வாத்தியமாகிய ஆர்மோனியங்கூட எம்முடையதல்ல! சிலப்பதிகாரம்-மணிமேகலையில் வரும் ஆடலும் பாடலும் யாருடையவை? ஆடலரசி மாதவியின் கானல்வரி! பதினொருவகை நடனமும் எம்முடையவைதானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இராவணன் காலத்துத் தமிழும்- தமிழ்க்கலையும் சிதைந்து ஆரிய முலாம் பூசப்பட்டன. இராவணன், ஆரியனாகிய இராமனை எதிர்த்தான் மொழியையும் கலையையும் காப்பாற்றிட ! ஆனால், பிற்கால அரசர்கள் அவ்வக்கால சமயச் சூழ்நிலைக்கேற்ப அரசியலை மாற்றினர்; சோமபானமும் - பெண்ணும் பிற்கால அரசர்களுக்கு முதன்மையாயின; தாராளமாக வழங்கப்பட்டன, அவற்றில் மயங்கிய அரசர்களுக்கு 'ராஜகுரு' ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டார். இராசகுருவின் ஆலோசனையில் சரிந்தன தமிழன் சாம்ராஜ்யங்கள்! சேர-சோழ-பாண்டியராகப் பிரிந்தனர். தமக்குள் சண்டை போட்டனர். ஒற்றுமை குலைந்தது. சிதைந்தது. தமிழகத்தில் பல்லவ சாம்ராஜ்யங்கள் உருவானது. அங்கே சமஸ்கிருதம் ஆட்சிமொழி! முதலாம் குலோத்துங்க சோழனுக்குப்பின் அசல் தமிழர்கள் யாரும் ஆட்சி செய்யவில்லை. நரசிம்ம பல்லவன், வீர பாண்டிய கட்டப்பொம்மன் யாவருமே போலித் தமிழர்கள்!

பரதரால் தரப்பட்ட பரதக்கலை விதிமுறைகள் அடங்கியது. பரதரால் நுண்கலைத் துறையில் தமிழன் தலைநிமிர்ந்தான். உலகம் வியக்கிறது. பாராட்டுகிறது. சிங்கள மாணவர்கள் இதனை நன்கு கற்கின்றனர். கற்று ஆசிரியர்களாகவும் உள்ளனர். பாரதநாடு முழுமையும் பரதக் கலையின் சாயல் படாத நாட்டியமே இல்லை.

பரதர் ஒரு தமிழர் என்ற ஆய்வுக் கருத்து உண்டு. எனவே பரதக் கலையில் ஆரிய மயப்படுத்தப்பட்ட பகுதிகளைப் பிரித்து இனங்கண்டு மேலும் பரதக் கலையின் சிறப்பு வளர்ந்திடப் பாடுபட வேண்டும். இதனைத் துணிவுடன் செய்திடல் வேண்டும். இசையில் தெலுங்குருப்படிகளைப் பிரித்துக் கொண்டனர். சிதம்பரத்தில் அண்ணா மலை மன்றம் இதற்கு வழி கோலியது. இசையரசு தண்ட பாணி தேசிகரின் "நல்ல சமயமடா இதை நீ நழுவ விடுவாயோ' எனும் பாடல் என்றும் ஒலிக்கின்றதே! தண்டபாணிதேசிகரின் துணிவு எமக்கு நடனத்தில் வந்திட வேண்டும். தெலுங்கு உருப்படிகளாகப் போடப்பட்ட தமிழ் உருப்படியே இப்பாடலாகும். குரலின் கனிவு இசையின் மென்மை தாளம், லயம், சுருதி எல்லாம் தேசிகரின் நா அசைந்த போது கிளர்ச்சி கண்டன. தேசிகரின் 'நல்ல சமயமடா' பாடல் இடம் பெறாத மேடை, உச்சரிக்காத வாயில்லை. என்றானது. தேசிகரின் மெட்டிலேயே பாடலைப் பாட முயன்றனர். இராவணின் சின்னம் - உயிர் இலச்சினை வீணை யாழினால், யாழ்ப்பாணம் ஆனதே.

இப்பொழுது இலத்திரனியற் காலம்! கணனிகள் செயற்படும் வேளை! பாற்கலங்கள் அல்லாத கலங்களிலிருந்து இன உற்பத்தி செய்யும் நேரம்! இதயம், ஈரல், சிறுநீரகம் போன்றனவற்றை மாற்றீடு செய்யும் பொழுது இன்னமும் 'செவ்வாய் தோசம்' எனச் சொல்லிக் கொண்டு வாழலாமா? தெய்வத்தா லாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்' எனும் குறளைத் துணிவாகக் கொள்ளலாகாதா?

ஆடற்கலை அறம்-பொருள்-இன்பத்தை அளிக்கவல்லது. பேரரசர்களால் உன்னதமாக்கப்பட்டது. வேதகாலத்திலும் சிறப்பாக இருந்தது. காலப்போக்கில் தன் சிறப்பிடத்தை இழந்து, கடந்த நூற்றாண்டுகளில் கௌரவமான குடும்பப் பெண்கள் பார்ப்பதுவும் பாவம் என்ற நிலையை அடைந்து, இன்று, காலச் சக்கரத்தின் சுழற்சியில், சமுதாயத்தில் ஒரு கௌரவச் சின்னமாகி, மக்கள் கலையாக மீண்டும் பரிணமிக்கும் நிலையை அடைகிறது. பாடசாலைகளில் பல்கலைக் கழகத்தில் ஒரு பாடமாக அமைந்துள்ளது.

நடனக் கலைஞர்கள் சில இன்றியமையாத குணங்களைப் பெற்ற வர்களாக இருக்க வேண்டும். இந்த அடிப்படைத்

தேவைகள் இல்லாமல் கலைஞர்களாக மலர முடியாது. கலை ஞானம் என்பது பிறப்பாலும், வளர்ப் பாலும், பயிற்சியாலும் கிடைப்பதாகும். பிறப்பு- பரம்பரை வலிமையானதாகும்.

இயற்கையான முகப்பொலிவு, உடல்வளம், இசை- தாளத்திற்கேற்ற உணர்வு, அறிவுடைமை, ஆர்வம், பொறுமை, தன்னடக்கம், தன்னம்பிக்கை, மரியாதை, முயற்சி, கவனம் ஆற்றல், குரல்வளம் போன்றவை இயல்பாக இருக்க வேண்டும். நடனக் கலைஞருக்கு, நல்ல பயிற்சியின் பயனாகப் பெறக்கூடிய தாளப் பிரசுதாரங்களில் வல்லமை, ஆடலசை வுகளில் தடையில்லாத நளினம், கடினமான அடவுக் கோர்வை. அபிநயப் பின்னல்களையும் மிகச் சுலபமாகக் செயலாற்றும் இயல்பான நெளிவு-சுளிவுகளை அதில் தெளிவாகப் பளிச்சிடும் அங்க சுத்தம் மற்றும் குணசித்திரங்களைப் புரிந்து கொண்டு அபிநயக்கும் தன்மை முதலியன நடனக் கலைஞரிடம் குடிகொண்டிருக்க வேண்டும்.

நடனத்தை நல்லாசிரியரிடம் பயில வேண்டும். கலை கலைக்காக அல்ல-வாழ்க்கைக்காக என்றாலும் கலையை வணிகமாகக் கொள்ளாத கலையுள்ளம் படைத்த தமிழுணர்வு மிக்க ஆசிரியரிடம் கற்க வேண்டும். நடனக் கலைக்கு உயிர்நாடியாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள். இக்கலை இன்றும் உயிரோட்டமாக இருப்பதற்கு அவ்வாசிரியர்களின் தொண்டும், தியாகமும், கலையார்வமுமே காரணமாகும். பரம்பரையான நடன ஆசிரியர்களை நட்டுவனார், அண்ணாவியார் எனக் குறிப்பிட்டு வந்தனர். தற்பொழுது ஆசிரியர்கள் இல்லாது நட்டுவாங்கம் மட்டும் சிலர் செய்து வருகின்றனர். சிலர் ஆசிரியர்களாக இருந்தும் நட்டுவாங்கம் செய்வதில்லை. மரபு வழி வந்த ஆசிரியர்கள் தாமே பயிற்றுவிப்பவராகவும் நட்டுவனாராகவும் இருந்து வருகிறார்கள். ஆசிரியர்கள் வணக்கத்திற்குரிய ஆசான், குருஜீ ஆக மதிக்கப்படுகிறார்கள். கொஞ்சம் Social லானால் master-miss ஆகவும் சொல்லப் படுகிறார்கள். குரு என்பது பண்பானது, மேலானதாகும்!

இந்த குரு- சிஷ்ய, ஆசிரிய மாணவ உறவு உரமளிப்பதாக உள்ளது. இதன்மூலம் கலை வளரவும், கலைமூலம் பண்பு வளரவும், பண்பு மூலம் ஒன்று கூடலும், ஒன்று கூடல் மூலம் சமூக உறவும், சமூக உறவு மூலம் வாழ்வின் இன்பமும் உண்டாக வேண்டும்.

பற்றில் தனித் தமிழும், வளர்ப்பதில் தமிழ்க் கலையும், செயல்களின் அணுகுமுறையில் பகுத்தறிவும் கொண்டவர். பண்புவழிச் சென்று பழகிடும் பகுத்தறிவுச் செம்மல் வேலணை நா.வீரசிங்கம் அவர்கள். நாடகக் கலையில் மிகவும் ஆர்வமானவர். கலைஞரின் நச்சுக் கோப்பை நாடக மூலம் தன்னைக் கலையுலகுக்கு அறிமுகப்படுத்தியவர். நடமாடியின் சங்கிலியன் - யாழ்ப்பாணம் வரலாற்று நாடகம், அ.பொ.செ.யின் ஒன்றே குலம். சமூக நாடகம், டாக்டர் கோவூரின் நம்பிக்கை-பகுத்தறிவு நாடகம் S.S.கணேசபிள்ளையின் புளுகர்பொன்னையா நகைச்சுவை நாடகம் போன்ற நாடகங்களைத் தயாரித்து நடித்து-வெளியிடுவதில் பெரும்பணியாற்றியவர். கொழும்பு யாழ்க் கலையரங்கத்தின் செயலாளர்-பொருளாளர் நாயகமாக விளங்கிய கலைத்தொண்டர். தாய்நாடு பதிப்பகத்தின் உரிமையாளராக விளங்கியதோடு 'தாய் நாடு' கலை, இலக்கிய சமூக மாத இதழின் சிறப்பாசிரியராகப் பணியாற்றிய செந்தமிழ்ச் சேவையாளர்.

அவரது மக்கட் செல்வங்கள் அறுவரும் கலைப்பிரியர்கள், கலைஞானம் படைத்தவர்கள். தமிழை-தமிழ்க் கலையை வளர்த்திடுவதில் நிழல்போல நின்று கணவருக்கும் பிள்ளைகளுக்கும் உதவும் திருமதி அன்னலெட்சுமி (அமர) வீரசிங்கம் அவர்கள் பெரிதும் போற்றுதற்குரியவர்.

குறளரசு -வேழவேந்தன் இருவரின் மிருதங்க அரங்கேற்றமும், ஈழகாந்தன் - இளங்கோவன் ஆகியவரின் நடன அரங்கேற்றமும் நடந்தேறி விட்டன. இப்பொழுது தமிழினி-இளவரசி சகோதரிகளின் நடன அரங்கேற்றம் மருதானை எல்பின்ஸ்ரனில்! 20/6/1998 இல்!

தமிழினி-இளவரசிக்கு ஆசிரியையாக, குருவாக விளங்குபவர் செல்வி.ஞானாம்பிகை விக்கினேஸ்வரன் அவர்கள். இளஞி! என்றாலும், அவரது கண்-விரல்களின் அசைவு நடனக் கலையில் மிகவும் பயிற்சி பெற்ற ஆற்றலும் அனுபவமும் கொண்டவராகத் தென்படுகிறார். செல்வி ஞானா மேலும் வளர்ந்திட வேண்டும். இலங்கையில், நடன ஆசான்கள் சுப்பையா, நல்லையா, வேலானந்தன் திருமதி.திரிபுரசுந்தரி ஆகியோரின் நெளிவு சுளிவுகளைப் பெற்ற நடன ஜாம்வாணியாக வளர்ந்திட வர்ழ்த்துகிறேன்.

1961 -லிருந்து இரட்டையர்கள் போல விளங்கிடும் நண்பர் வீரசிங்கம் தம்பதிகளின் எச்சங்களின் கலை, மலை விளக்காக விளங்கிட, கலங்கரை விளக்காகத் திகழ்ந்திட வாழ்த்துகிறேன்.

# பதிலுரை

## தமிழினி -இளவரசி

நுண்கலைகள் ஐந்தினுள் நடனக்கலை ஒன்றுதான் எந்த மொழியிலும் சமயத்திலும் அதன் பிறப்புக்குரிய தனித்தன்மை மாறாமல், குணவியல்பு சிதையாமல் புகுந்து வெளிவரக் கூடியது. ஓவியமும் சிற்பமும் வேறு வேறு மொழிகளிலே தோற்றும்போது அந்தந்த மொழி-சமயத்திற்குரிய தன்மைகளுடன் வெளிப்படும். இசையும் அப்படியே; அதன் தொனியில் இசைக்கருவியின் தன்மைக்கேற்ப மொழி-சமய கருத்துக்களுகேற்றவாறு மாறுபடும்.

ஆனால், நடனம் அப்படியானதொன்றல்ல. மழை கொழும்பிற் பெய்தாலென்ன? யாழ்ப்பாணத்திற் பெய்தாலென்ன ? தன்மை ஒன்றுதான்! பயன் ஒன்றுதான் ! அதே போன்றதே பரதக் கலை. இதற்கு மொழி-சமய மக்கள் நிலை வேறுபாடுகள் இல்லை. நாட்டின் இளவரசி ஆடினாலென்ன, கிராமத்துப் பெண் ஆடினாலென்ன? இருவரும் ஆடுவது பரதக் கலைதான்! அத்தகைய வேறுபாடற்ற-விகாரமற்ற தன்மை ஆடற் கலைக்குண்டு!

இத்தகைய பெருமதிப்புக்குரிய கலையை எம்மைப் படிக்க வைத்த எமது பெற்றோர்களுக்கு, உணர்ச்சியைத் தூண்டிய எமதாசிரியைகளுக்கு நாம் என்றென்றும் கடப்பாடுடையோம். காலச் சூழ்நிலையால் ஏற்பட்ட இடப் பெயர்வுகள், அவற்றால் வந்துள்ள இன்னல்-இடைஞ்சல்-துன்பம்-துயரம் ஆகிய சந்தர்ப்பங்களிலும், "துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ ஆடிக்காட்ட மாட்டாயா?" என்ற பாரதி வரிகளுக்கேற்ப எம் மனத்தில் துன்பத்தின் சாயல் படாதவாறு பார்த்து, காத்து, கலைப்பயிற்சியை அயராது அளித்திட்ட எமதருமைப் பெற்றோர்கள் எமது வணக்கத்திற்குரியர். எமது உடன்பிறப்புக்கள்-அருமை அண்ணன்கள் குறளரசு-வேழவேந்தன்- ஈழகாந்தன்-இளங்கோவன் எமது பெருமையில் மகிழ்வு கொள்ளும் அருமைக்குரியர்.

இடப் பெயர்வு, பயிற்சியின் கால இடைவெளியைக் கூட்டியுள்ளது. எனினும், பெற்றோரினதும், எமதும் ஊக்கமும் காலந் தாழ்த்தி என்றாலும் ஆக்கத்தைத் தந்துள்ளது மகிழ்ச்சி தருவதாகும்.

பக்தியிற் கூட குருபக்தி சிறந்தது என்பர். குருவில்லாத வித்தை ஆகாது. குருவின் தூண்டுதல், லாவண்யமான பயிற்சி கொண்ட கலையிலுள்ள ஆழ -அகலமான அறிவு, தலைமைத்துவப் பண்பு குருவுக்கு இருக்க வேண்டியவையாகும்.

எனது ஆறாம் வயதில் நடனக் கலையின் அரிச்சுவடியை ஆரம்பித்தவர் செல்வி. மஞ்சுளா விஜயரத்தினம் அவர்கள். 1983இல் இடம் பெற்ற இடப்பெயர்வால் அவரிடம் தொடர்ந்து பயிற்சியைப் பெற்றிட முடியவில்லை. எனினும், யாழ்ப்பாணத்தில் மீண்டும் இக்கலையைச் செல்வி கலாமதி அவர்களிடம் எனது தங்கையுடன் சேர்ந்து பயின்றோம். யாழ்ப்பாணம் கலைகளுக்குப் பஞ்சமில்லா இடம். பயிற்சியில் கடுமை இருக்கும்! அதற்கேற்ப ஆசிரியை கலாமதி அவர்கள் கடுமையாக இருந்தாலும் சகதோழி போன்று அன்பினாலும் பண்பினாலும் பரத நாட்டியத்தில் எமதார்வத்தைப் பெருகச் செய்தார்.

